www.tamilarangam.net

விலை ரூபா 10.00

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

சித்திரை 2000 | இதழ் -13

**குரல் 1:**
தான் செத்தாலும் படையை வாபஸ் வாங்க மாட்டாராமே சந்திரிகா?

**குரல்2:**
பாவம், இங்க அவையின்ர படை எங்க ஓடி ஒழியிறது என்டு தவிக்கிறது அவருக்கு தெரியாது போலும்.

# ஆனையிறவு முகாம் முற்றுகை: பத்தாயிரம் ஆக்கிரமிப்பு படை பணயமாக!



**சி**ங்கள ஆக்கிரமிப்பு படைகளை தோற்கடித்து தமிழீழத்தை விட்டு வெளியேற்றும் நெடிய போராட்டத்தில், ஆனையிறவு படைமுகாம் முக்கியமானதொரு புள்ளியாகும். இந்த முகாம் புலிகளின் கைகளில் வீழ்ச்சியுறும் எனின் தமிழீழ விடுதலைக்கான இராணுவ செயற்பாடுகளானது, ஒரு முடிவினை நோக்கி நகர்வதற்கான தொடக்கமாக அமைந்துவிடும்.

வன்னிப்படுதோல்வியானது, சிறிலங்கா அரசைப் போதுமான அளவிற்கு பலவீனப்படுத்தியுள்ளது. ஆனையிறவு போர்முனையிலும் அரசு தோல்வியடையும் எனின், இராணுவ ரீதியில் மட்டுமல்ல அரசியல் ரீதியிலும் அது மீள முடியாத நிலைக்கு சென்று விடும். காரணம் மீள்வதற்கான எந்தவித அவகாசத்தையும் விடுதலைப்புலிகள் சிறிலங்காஅரசுக்கு தரப்போவதில்லை.

தற்போது யுத்தமுனையானது பண்புரீதியில் ஒரு தலைகீழான மாற்றத்தை கண்டுள்ளது. கடந்த காலத்தில் விடுதலைப் போராளிகளின் முகாம்களை கைப்பற்றி அழித்தொழிக்க அரசபடையினர் பயன்படுத்திய படைநகர்வுகளையும், உத்திகளையும் (பல்வேறு முனைகளில் சமகாலத்தில் சுற்றி வளைத்தல் மற்றும் கரையோர தரையிறக்கம் போன்றன) தற்போது அரசபடைகளின் முகாம்களை சுற்றிவளைப்பதற்கும் தகர்ப்பதற்கும் விடுதலைப் புலிகள் பயன்படுத்துகின்றனர். புலிகள் முதல் நடவடிக்கையாக படையினரின் ஆட்டிலறி இலக்குகளை ஊடுருவிச் சென்று அழிப்பதன் மூலம் விரைவாக முகாம்களை வீழ்த்துவதை பிரதான போர்முறையாக கொண்டுள்ளனர். இதன் காரணமாக படையினரின் போரிடும் ஆற்றல் மிக மோசமாக சரிந்து செல்கிறது.

ஆனையிறவு முகாம் மீதான விடுதலைப்புலிகளின் முழுமையான அல்லது பகுதியளவிலான வெற்றியினை தீர்மானிக்கும் காரணிகளாக, புலிகளின் இராணுவ பலம் மாத்திரமல்ல, சிங்கள அரசை பாதுகாப்பதில் தமது நலன்களை பேணுகின்ற ஏகாதிபத்திய மற்றும் பிராந்திய வல்லரசு நாடுகளும் உள்ளன. விடுதலைப்புலிகள் தீர்க்கமான வெற்றியை பெறும் ஒரு நிலைமை ஏற்பட முன்பே பிரச்சனைகளை தாம் விரும்பும் விதத்தில் தீர்த்து வைப்பதில் மேற்படி நாடுகள் தற்போது தீவிர அக்கறை கொண்டுள்ளன.

மிக அண்மைக்காலத்தில், சர்வதேச தலையீட்டுடன் அரசியல் பேச்சுக்கள் நடைபெறுவது உறுதியாக இருப்பதால், அதற்கு முன் தம்மை இன்னும் பலமான நிலையில் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் புலிகளுக்கு உள்ளது. தற்போதுள்ள பலமான நிலையை விட ஆனையிறவை கைப்பற்றுவது

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

## பெண்மீதான அத்துமீறல்!

சுரிதார் அணிந்திருந்த காரணத்திற்காக தமிழ் பெண் போராளி என சந்தேகித்து இளம் பெண் ஒருவரை நடுத்தெருவுக்குக் கொண்டு வந்து, பலரதும் முன்னிலையில் உடைகளைக் களைந்து நிர்வாணமாக்கியது சிங்களப்படைகள். கொழும்பு நகரின் பிரதான வீதியொன்றில் நடைபெற்ற இவ்வநாகரீக சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர் குருநாகலைச் சார்ந்த ஒரு சிங்களப் பெண் ஆவார். இது உண்மையில் குறிப்பிட்ட சம்பவத்துடன் மட்டுப்பட்ட விடயமல்ல. இனிவரும் காலத்தில் சிங்களப் படைகள் எதுவித தயக்கமுமின்றி தமிழ்ப் பெண்களை நடுத்தெருவில் நிறுத்தி அவமானத்திற்குள்ளாக்குவதையும் அச்சுறுத்துவதையும் சகஜநடவடிக்கையாகக் கொள்ளப் போகின்றன என்பதையே இச்சம்பவம் காட்டுகிறது என்பதை நாம் கவனத்திற் கெடுக்க வேண்டும்.

வளர்ந்துவிட்ட பேரினவாதம் தமிழ் மக்கள் மீது பல்வேறு அநியாயங்களையும் இழைத்துவருகிறது. பேரினவாத அட்டுழியங்களின் உச்சநிலையானது இன்று சிங்கள மக்களையே பாதிக்குமளவுக்கு கண்மூடித்தனமாக வெளிப்படத் தொடங்கியுள்ளன என்பதற்கு இத்தகைய சம்பவங்களே சான்றாகும்.

தமிழ்ப் பெண்களை சிங்கள ஆண் படைகள் அவமானத்திற்குள்ளாக்குவதும், அத்துமீறுவதும் அவற்றின் பேரினவாதத்துடன் கூடிய ஆணாதிக்கமாகும். இந்நிலையில் இவ்விரு அடக்குமுறைகளையும் ஒரு சேர எதிர்த்துப் போராட வேண்டிய - அவ்வாறு போராடி வரும் தமிழ் பெண்களான நாம், சக தேச பெண்களின் உரிமைகளை மதிப்பதையும், கௌரவிப்பதையும் எமது பண்பாகக் கொண்டிருக்க வேண்டும். அவ்வகையில் குருநாகல் சிங்களப் பெண்ணுக்கு நேர்ந்த இந்த அத்துமீறலை கண்டிப்போம்.

- சியா-

## முஸ்லிம்தேசத்தின் புதிய அரசியல் குரல்!

வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளை நிலைநாட்ட வேண்டும் என்ற நோக்கத்தில், வட-கிழக்கு முஸ்லிம் கொங்கிரஸ் என்ற அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஈழத் தமிழர்களின் தேசிய பிரச்சினைக்கு, அரசியல் தீர்வு காண்பதற்குரிய ஒரு முயற்சியாக, அரசியல் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதற்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்ற இன்றைய நிலையில், முஸ்லிம்தேசத்தின் மத்தியில் இத்தகைய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டிருப்பது முக்கிய கவனத்திற்குரியது.

ஒரு தனியானதேசம் என்றவகையில், வட-கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்கள், தமது அரசியல் உரிமைகளை உறுதியாக நிலைநாட்டுவதற்கான கடப்பாட்டை கொண்டிருக்கின்றார்கள். தமிழ்த்தேசத்தின் அரசியல் உரிமைகள் நிலைநாட்டப்படுவது என்பது, தவிர்க்க முடியாமல் வட-கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்தேசத்தின் உரிமைகளுடனும் ஊடறுத்து செல்ல கூடியதாக இருப்பதால், முஸ்லிம்தேசம், தமது உரிமைகள் குறித்து விழிப்புணர்வுடனும் பிரக்ஞையுடனும் இருப்பது அவசியமாகின்றது.

இவ்வகையில், ஒரு தனியான தேசத்தின் அரசியல்குரல் என்றவகையில், முஸ்லிம்தேசத்தின் மத்தியில் இருந்து, அவர்களின் உரிமைகளுக்காக வெளிப்படுகின்ற கோரிக்கைகளை அனைத்தும் சமத்துவமான அரசியல் அக்கறையை பெற வேண்டும். சுதந்திரமாகவும் சுயமாகவும் வெளிப்படுகின்ற இத்தகைய கோரிக்கைகள், முஸ்லிம்தேசத்தின் அரசியல் அபிலாஷைகளையும் அரசியல் எதிர்பார்ப்புகளையும் உள்ளடக்கியிருப்பவை. இவற்றை வென்றெடுப்பதற்காக, முஸ்லிம்தேசமும் அதன் அரசியல் அமைப்புக்களும் ஒன்றிணைந்து போராடுவது, அவர்களின் உரிமையாகவும் அரசியல் கடப்பாகவும் அமைகின்றது.

வாசன்

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**


www.tamilarangam.net

அன்பார்ந்த மக்களே! விடுதலைப்போராட்ட சக்திகளே!

எண்ணற்ற எழுச்சிகளையும் வீழ்ச்சிகளையும் சாதனைகளையும் கண்ட ஐம்பது வருடகால நமது அரசியல் போராட்டத்தில் அரைப்பகுதி ஆயுதபோராட்ட வரலாறாக உள்ளது. இப் போராட்டம் நெடுகிலும், எமது அடிப்படை நிலைப்பாடாக இருந்து வருவது அரசியல் சமத்துவம் என்ற மிக எளிமையான அம்சமே. இதனை ஆரம்பத்தில் தனி மனிதர்கள் என்ற நிலையை கடந்து இனத்துவசமூகம் என்ற வகையிலும் இதற்கெல்லாம் பிரிதிபலிப்பாக கடுமையான அடக்குமுறைகளையும், கொடுரமான யுத்தத்தையும் சிறிலங்கா அரசு எம்மீது திணித்து இன அழிப்பை மேற்கொள்வது உறுதியாகியதும் தேசமாக, எமக்கென தேச அரசமைக்கும் பிரிக்கமுடியாத இறைமைக்காக நாம் நிற்கின்றோம்.விட்டுக்கொடுப்புகள் இன்றி போராடி வருகின்றோம்.

வெற்றிகளும் துயரங்களும் நிறைந்த இந்த நெடிய போராட்டத்தில் எத்தனையோ விலைகளை நமது தேசம் கொடுத்து வருகின்றது. இனிவரும் காலம் இதுவரை எதிரிகள் தாம் இழைத்த அட்டுழியங்களுக்காக அதற்கான விலைகளை அவர்கள் செலுத்த வேண்டிய காலமாகும். இந்த விலைகளை எந்த வடிவத்தில் செலுத்தப்போகின்றார்கள் அது குருதியா, ஒலிவ் மரமா? என்பதை தீர்மானிப்பதை அவர்கள் வசம் விட்டுவிடுவோம்.

சிறிலங்கா அரசு அரசியல் பேச்சு வார்த்தை என கூறிக்கொண்டு அன்றாடம் மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பை பாருங்கள். பிக்குமார் சங்கங்களின் கொந்தளிப்பதையும், அவ்வழுத்தங்களுக்கு சிங்கள ஆளுங்குழுமம் சரணடைவதையும், வீரவிதானவின் எழுச்சியையும், ஜேவிபி இன் புத்தெழுச்சியையும், இனவாத பத்திரிகைகளின் ஆவேசஎழுத்துக்களையும், நாட்டை பாதுகாக்க ஒவ்வொரு குடும்பமும் ஒருவரை தாரை வார்க்குமாறு இறைஞ்சும் படைத்தலைமையினதும், பாதுகாப்பு அமைச்சினதும் நடவடிக்கைகளையும், தமிழீழத்தில் விமானத்தளங்களின் விஸ்தரிப்பையும், நமது கடற்கரைகளை மேலும் மேலும் ஆக்கிரமிப்பதையும். ஒவ்வொரு நாளும் தவறாது ஒவ்வொரு தமிழ் கிராமங்களை வேட்டையாடுவதையும், பல ஆயிரம் நமது மக்களை முகாம்களில் அடைத்துப் போடுவதையும் பாருங்கள் எதிரிகளின் இந்த அட்டகாசங்கள் அவர்களின் உள் நோக்கை சந்தேகத்திற்கிடமின்றி வெளிப்படுத்துகின்றது.




அவர்களது ஒவ்வொரு சமாதான முனைப்பும் எம்மீதான கொடுமைகளின் கடுமையை அதிகப்படுத்துவதான விதியாக உள்ளது எனின் இந்த விதியை தீய்க்கும் புதுவிதியை நாம் வகுக்க வேண்டாமா? இன்றைய நிலையில் விடுதலைப்புலிகளாகட்டும், தமிழீழ மக்கள் கட்சியாட்டும், சக தேசபக்த அமைப்புகள் அல்லது சக்திகளாகட்டும், நமது மக்களாகட்டும் அனைவருக்கும் ஒரு பொதுக்கடமை உள்ளது என்ற புதுவிதியை நாம் படைத்து அதனை வீச்சாகவும் இன்றைய சர்வதேச சூழலை கருத்தில் கொண்டு வினைநுட்பமாகவும், இராஜதந்திர உத்திகளுடனும் நடைமுறைப்படுத்த வேண்டாமா?

இந்த வகையில் நமது தேசத்தின் உள்ளேயும் அதற்கு அருகாமையிலும் புறத்தேயும் ஆற்ற வேண்டிய அவசர, அரசியல்கடைமைகளின் தாற்பரியத்தில் ஆழ்ந்த கவனத்தை குவிப்போம். இந்த சந்தர்ப்பத்தில் நாம் இழைக்கும் தவறுகளை திருத்துவதற்கு அவகாசம் கிடைகாத அளவிற்கு எதிர்காலம் கடுமையாக இருக்கும் என்ற எச்சரிக்கையுடன் தற்போதைய கட்டத்தை எதிர்கொள்வோம். இதற்காக அனைத்து சக்திகளுடனும் இணைந்தும் அக்கம் பக்கமாகவும் இருந்து தமிழீழ மக்கள் கட்சி செயற்படும்.

மிக முக்கியமான வரலாற்று கட்டத்தில் நமது தேசம் நிற்கின்றது. ஆளுங்குழுமம் தமக்கிடையிலான வேறுபாடுகளை ஒத்திவைத்து விட்டு, அணிசேர்வதும் தம்மைப்பலப்படுத்துவதும் தீவிரமடைந்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் அடக்கப்பட்டு வரும் நமது தேசம் தன்னைப்பலப்படுத்த வேண்டியது அவசர கடமையாகும். அதற்குமுன், எதிரிகளின் தரப்பை பலப்படுத்தும் பாரதுாரமான தவறை நாம் இழைக்காமலும், எதிரிகளின் வரலாற்று பூர்வமான ஏமாற்றுக்களுக்கு உட்படாத விழிப்புடனும் நாம் செயற்பட வேண்டும். இருப்பது எதிரெதிரான இரண்டு முகாம்கள். எமது மாகமிற்குள் வேறுபாடுகள் தப்பெண்ணங்கள் வேறுபட்ட அரசியல்கள் இருக்க கூடும். ஆயினும் எதிரி முகாமுடன் எந்த சமரசத்திற்கும் இடமிருக்க கூடாது. அதற்கான எந்தவொரு சிறு பிடிமானங்களையும் நாம் கொடுக்க கூடாது. இரண்டு முகாம்களாக இருந்து அரசியல் எதிர்காலம் குறித்து விவாதிக்கப்போகின்றோம். இடையில் சந்திரிகாவாக இருந்தாலும், ரனிலாக இருந்தாலும் எமக்கு தனிப்பட்ட சந்திப்புகள் தேவையில்லை. நாம் என்ன அவர்களுக்கு அரசியல் பாடம் சொல்லிக்கொடுக்கப்போகின்றோமா அல்லது அடக்குமுறை அரசியலின் புதுவாரிசுகள் என கருதி எமது பிரச்சனைகள் இனித்தான் ஒப்புவிக்கப்போகின்றோமா? இப்போதேனும் அரசியல் தரகுவேலைகளை விட்டொழியுங்கள்.

நீண்ட காலம் இரகசிய மாக செயற்பட்டு வந்த எமது அமைப்பானது, சென்ற வருடம் ஏப்ரல் 15 இல் தனது கொள்கைகளையும் நிலைப்பாடுகளையும் மக்கள் முன் பிரகடனம் செய்து

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## ஆனையிறவு...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

அல்லது அதனை மீளமுடியா முற்றுகைக்குள்ளாக்குவது என்பதுதான் நமது தேசத்திற்கு என ஒரு தனியான அரசுக்கட்டமைப்பை ஒத்த ஒரு தீர்வினை எட்ட முழுமையான வாய்ப்பை தரும். இதில் விடுதலைப்புலிகள் தெளிவாக உள்ளனர். தேசிய நலனின்பாற்பட்டு அது முற்றிலும் நியாயமானதும் கூட. தற்போது தாக்குதல் நிலையில் பலமாக இருக்கும் விடுதலைப்புலிகள் ஆனையிறவை கைப்பற்றினால், அல்லது முற்றுகைக்குள்ளாக்கினால் எந்தவித சந்தேகத்திற்கும் இடமின்றி அவர்களின் அரசியல் மற்றும் இராணுவ மேனிலையை உறுதிப்படுத்தப்பட்டு விடும்.

இப்படியான ஒரு பலமான நிலையை புலிகள் அடைவதற்கு முன்னமே, அவ்வாய்ப்பு நெருங்கிவிட்டது என்பதை கணிப்பிட்டதன் அடிப்படையிலேயே தற்போது சிறிலங்கா அரசுக்கும் புலிகளுக்கும் இடையே ஒரு இணக்கத்தை ஏற்படுத்துவதில் மேற்படி ஆதிக்கஅரசுகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் செயற்பட்டு வருகின்றன. இந்த விதத்தில், புலிகள், ஆனையிறவை கைப்பற்றுவதிலும் அதனை தொடர்ச்சியாக தமது கட்டுப்பாட்டில் தக்க வைப்பதிலும் ஆளணி மற்றும் வளங்களின் பற்றாக்குறை என்பதோடு, சர்வதேச ஆதிக்கசக்திகளின் எதிர்மறை தலையீட்டையும், அழுத்தங்களையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர்.

உடனடியாக, ஆனையிறவு முகாமை முற்றாக கைப்பற்றி தம்வசப்படுத்துவதில் விடுதலைப்புலிகளுக்கு உள்ள மேற்படி சாதமற்ற நிலைமையை நாம் ஏற்றுக்கொள்வோம் எனின் தற்போதைக்கு சாத்தியமாக கூடியது ஆனையிறவு முகாமையும் அங்கிருக்கும் பத்தாயிரம் படையினர் மற்றும் ஆயுததளபாடங்களையும் முற்றிலுமாக விடுதலைப்புலிகள் தமது முற்றுகைக்குள் வைத்திருப்பதே. இவற்றை பணயமாக வைத்துக்கொள்வதன் மூலம், புலிகள் அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் தமிழீழத்திற்கு மாற்றாக ஆனால் ஈழததமிழரின் இறைமையை உறுதிப்படுத்தக்கூடிய, ஒரு அரசியல் ஏற்பாட்டைக் கோர முடியும்.

ஆயிரக்கணக்கான படைவீரர்களின் உயிர்களும், அவர்களை சார்ந்துள்ள குடும்பங்களும் உறவினர்களும் முகாமிலுள்ள படைக்கலங்களும் தாம் அடைந்துள்ள வரலாற்று அவமானம் மிக்க படுதோல்விகளும் சிறிலங்கா அரசையும் ஆளுங்குழுமத்தையும் முன்னெப்போதையும் விட இறங்கி வர செய்யும். இத்துடன் சர்வதேச அழுத்தங்களும் சேரும் போது, சிங்கள தேசத்தின் தரப்பில் இருந்து எழும் எந்தவிதமான அழுத்தத்தையும் அடக்கி, சர்வதேச அரசுகளின் ஒப்புதலுடன் கணிசமான விட்டுக்கொடுப்புகளை செய்து பிரச்சனைக்கு தீர்வுகாண சிங்கள ஆளுங்குழுமம் நிர்பந்திக்கப்படும்.

இப்போர் முனையில் ஆனையிறவு முகாமை முற்றான சுற்றி வளைப்பில் முடக்கி வைப்பது எனும் அளவிற்கு புலிகள்தாம்எதிர்பார்த்த வெற்றிகளை பெறமுடியவில்லை எனின், ஆனையிறவு நீண்டகாலத்திற்கு கொந்தளிக்கும் புள்ளியாக இருக்கும். அல்லது விடுதலைப்புலிகள் தற்போதுள்ள இராணுவ மேல் நிலையினை பேணிக்கொண்டு, சிங்கள அரசு தரப்பிற்கும் சிங்கள தேசத்திற்கும் ஏன் சர்வதேச சக்திகளுக்கும் நிருபிக்க கூடிய வேறு எதிர்பாராத வெற்றிகளை சாதித்துக்காட்ட வேண்டியிருக்கும். சாதித்து காட்டுவதற்கான அனைத்து சாத்தியங்களும் உள்ளன.

-வன்னியன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசியல் பேச்சுவார்த்தையும் நம் தேசநலனும் !

இலங்கை அரசியல் தளத்தில் தற்போது இடம்பெறுகின்ற நிகழ்வுகள், அரசியல் பேச்சுவார்த்தைக்கான சூழல் உருவாகலாம் என்பதை வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பும் சிறீலங்கா அரசும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக தத்தமது பிரதிநிதிகளை தெரிவு செய்திருப்பதும் முதல்கட்ட பேச்சுவார்த்தைக்கான இடமாக நோர்வே தெரிவு செய்யப்பட்டிருப்பதும் இத்திசையை நோக்கிய நகர்வுகள் படிப்படியே இடம்பெறுவதை குறிக்கின்றன.

சிறிலங்கா அரசுடன் இணைந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக செயற்பட்டு வருகின்ற தமிழ் ஆயுதக் குழுக்கள், சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே அரசியல் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என ஊர்வலங்கள் நடத்துகின்றன. இன்றைய சிறிலங்கா அரசாங்கத்தின் கூட்டுக் கட்சிகளில் ஒன்றான சிறிலங்கா முஸ்லிம் கொங்கிரஸ், வடக்கு- கிழக்கு இணைப்புக்கு தான் உடன்படுவதாக அறிவித்துள்ளது. மேலும் சிறிலங்கா அரசுக்கு உதவி வழங்குகின்ற நிறுவனங்களும் அமெரிக்க வருடாந்த அறிக்கையும் அரசியல் தீர்வின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளன. இவ்வாறு, தேசிய மற்றும் சர்வதேச அளவில் அரசியல் பேச்சுவார்த்தை நோக்கிய நகர்வு ஏற்பட்டு வருகின்ற நிலையில், ஒரு தேசம் என்றவயைில் நாம் எவ்வாறு செயற்படப் போகின்றோம்?



முதலில், அரசியல்பேச்சுவார்த்தை என்பது, போராட்டத்தின் ஒரு வடிவம் (ஒரு போராட்ட வடிவமே) என்பதை புரிந்து கொள்வோம். ஒரு தேசத்தின் விடுதலைப் போராட்டமானது, வெகுஜனப் போராட்டங்கள், ஆயுதப்போராட்டம், அரசியல் பேச்சுவார்த்தை, இராஜதந்திர அழுத்தம்.. என வேறுபட்ட வடிவங்களில் முன்னெடுக்கப்படுகின்றது. ஒருதேசத்தின் விடுதலையைப் பொறுத்தவரை, அதன் போராட்ட வடிவங்கள் ஒவ்வொன்றும் சமமுக்கியத்துவமுடையவை. இத்தகைய போராட்ட வடிவங்களில் எதைத் தேர்வு செய்வது என்பது, அப்போராட்டத்தில் பங்கு கொள்கின்ற சக்திகளின் விருப்பத்தினால் தீர்மானிக்கப்படுவதில்லை. மாறாக, ஒவ்வொரு கட்டத்திலும், நிலவுகின்ற குறிப்பான அக, புற சூழ்நிலைகளினாலேயே அக்கட்டத்திற்குரிய போராட்ட வடிவம் (மற்றும் வடிவங்கள்) தீர்மானிக்கப்படுகின்றன. இவ்வாறு மாறுகின்ற சூழலுக்கேற்ப, தனது போராட்ட வடிவத்தையும் மாற்றுவதன் மூலமே, ஒருதேசம் தனது இறுதி இலக்குவரை வெற்றிகரமாக முன்செல்ல முடியும். நமதுதேசத்தின் இன்றைய போராட்டச் சூழலில், அரசியல் பேச்சுவார்த்தை என்ற போராட்ட வடிவம் பிரதான இடத்தை பெறக் கூடும் எனக் கொள்வோமாயின், இந்த அரசியல் பேச்சுவார்த்தை மூலம், நாம் எவ்வாறு எமது இலக்கை அடைந்து கொள்ளப் போகின்றோம் என்பதில் அக்கறையை குவிப்பது அவசியம்.

அரசியல் பேச்சுவார்த்தை என்ற போராட்ட வடிவமானது, தனக்கேயுரிய குறிப்பான முறைமைகளை கொண்டிருக்கின்றது. இப்போராட்ட வடிவத்தில் பிரயோகிக்கின்ற உத்திகள், ஆற்றல்கள், தேர்ச்சி.. என்பவை ஏனைய போராட்ட வடிவங்களிலிருந்து வேறுபட்டவை, தனிக்குறிப்பானவை. ஒருதேசத்தின் அரசியல் கோரிக்கைகள் பகிரங்கத் தளத்தில் முன்வைக்கப்படுகின்ற சந்தர்ப்பமாக இது அமைகின்றது. எனவே அத்தகைய கோரிக்கைகளை சாரப்படுத்துவதும் அவற்றை அரசியல் பேச்சுவார்த்தை மூலமாக வென்று கொள்வதற்காக உறுதியாகவும் முரணற்ற முறையிலும் போராடுவதும் இங்கு அவசியமாகின்றது. எத்தகைய அழுத்தங்களை எதிர்கொள்கின்ற போதிலும், எத்தகைய சூழ்நிலை இறுக்கங்களை முகம் கொடுக்கின்றபோதிலும் இவற்றை சமாளித்து, தமது தேசத்தின் அரசியல் நலன்களை விட்டுக் கொடாது, இறுதிவரை தாங்கி நிற்பதற்கு அசையா உறுதியும் மனவலிமையும் பொறுமையும் அவசியமாகின்றது.

கடந்த காலங்களில் சிறிலங்கா அரசுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளின்போது தமிழர் அரசியல் அமைப்புகள் இத்தகைய அரசியல் பண்புகளை வெளிப்படுத்தவில்லை என்பதை விமர்சனபூர்வமாக புரிந்தேற்றுக் கொள்வோம்.

இவ்வகையில் இனிமேல் நடைபெறக் கூடிய சிறிலங்கா அரசுடனான பேச்சுவார்த்தைகளின்போது, நமது தேசத்தின் அரசியல் கோரிக்கைகளை நாம் தெளிவாக முன்வைக்க வேண்டும். நமது தேசத்தின் அரசியல் கோரிக்கைகளை சாரப்படுத்தும்போது, அவை எந்தவொரு அரசியல் அமைப்பினதும் தனிப்பட்ட கோரிக்கைகளாக மாறிவிடாதிருப்பதை முதலில் நாம் உறுதிப்படுத்த வேண்டும். இதைச் சாத்தியமாக்குவதற்கு தேசநலன் என்ற பொது இலக்கின் கீழ் நாம் அனைவரும் ஓரணியில் திரள்வது அவசியம். நமது கோரிக்கைகள் அனைத்தும் தேசநலன் என்ற அடித்தளத்தில் இருந்து பிறக்க வேண்டும். நமக்கிடையிலான அரசியல் வேறுபாடுகளை கடந்து, நமது கோரிக்கைகளை மையப்படுத்த வேண்டும். இதன் மூலம் அரசியல் பேச்சுவார்த்தை தளத்தில், நமது தேசத்தின் சார்பில் பங்கு கொள்வோர், நமது தேசத்தின் உண்மையான பிரதிநிதிகளாக திகழ்கின்றார்கள் என்பதை தெளிவாக வெளிப்படுத்த வேண்டும்.

இந்த அரசியல் பேச்சுவார்த்தையானது, விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையேதான் பிரதானமாக மையம் கொள்ளும் என்பதை புரிந்து கொள்வோம். யுத்தத்தில் நேரடியாக ஈடுபட்டுள்ள பிரிவினர் என்ற வகையிலும் இன்றைய நிலையில் இருதேசங்களையும் அரசியல் ரீதியில் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் என்றவகையிலும் இது தவிர்க்க முடியாதது. எனினும் இதன் அர்த்தம், இவ்விரு பிரிவுகளுக்கும் வெளியேயுள்ள பிரிவினர் மௌனமாக இருக்க வேண்டும் என்பது அல்ல. அவ்வாறு இருக்கவும் கூடாது.

பதிலாக, நம்மத்தியில் ஏற்படக் கூடிய தேசிய ஐக்கியமானது, விடுதலைப்புலிகள் இயக்கம் நமதுதேச உரிமைகளில் இறுதிவரை உறுதியாக நிற்கும்படி அவர்களை நிர்ப்பந்திக்கவும் பலப்படுத்தவும் வேண்டும். நாம் இந்த பேச்சுவார்த்தைகளின் மூலமாக எவற்றை எதிர்பார்க்கிறோம் என்ற அரசியல் எல்லையை தெளிவாக வகுக்க வேண்டும். இந்த எல்லைக்குள் நமது கோரிக்கைகளை பகிரங்கமாக முன்வைக்க வேண்டும். இதன் மூலம் அரசியல் பேச்சுவார்த்தையில் நமது தேசத்தின் சார்பில் பங்கு கொள்கின்ற விடுதலை புலிகள் இயக்கம், நமது மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய கடப்பாட்டை கொண்டிருப்பதை. நாம் அழுத்தமாக தெரியப்படுத்த வேண்டும்.

அரசியல் பேச்சுவார்த்தையானது பல்வேறு கட்டங்களை தாண்டி செல்ல கூடியது: நமது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கான சூழ்நிலை ஏற்படுத்தப்படுவதிலிருந்து நமது உயர் அரசியல் கோரிக்கையை வென்று கொள்வது வரை இது பலபடிகளை கடக்க வேண்டிய நிலையில் உள்ளது. இக்கட்டங்கள் ஒவ்வொன்றிலும் நாம் துாரதிருஷ்டியுடன் செயற்பட வேண்டும்.

பேச்சுவார்த்தையின் ஒரு கட்டத்தில், முஸ்லிம்தேசத்தின் சார்பில் அதன் பிரதிநிதிகள் நேரடியாக பங்கு கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும் என்பதை புரிந்து கொள்வோம். அத்தகைய சூழலில், அவர்களின் பிரதிநிதிகள் சமஅந்தஸ்துடன் அரசியல் பேச்சுவார்த்தைகளில பங்கு கொள்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். முஸ்லிம்தேசத்தின் அரசியல் எதிர்காலம் தொடர்பாக எந்தவொரு கோரிக்கையையும் முன்வைத்து, அதற்காக அரசியல் பேச்சுவார்த்தைத் தளத்தில் போராடுவதற்கு அத்தேசத்தின் பிரதிநிதிகளுக்கு உரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொள்வதோடு, அவ்வாறான உரிமைகளை சிறிலங்கா அரசு மறுக்க முடியாத சூழலையும் நாம் உருவாக்க வேண்டும்.

இதேபோன்று, மலையகத் தமிழர்கள், தமது பிரதிநிதிகளும் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பார்களாயின், அதற்கு ஆதரவாக நாம் செயற்படுவதோடு, அவர்களின் பிரதிநிதிகள் சமஅந்தஸ்துடன் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்கான சூழலை உருவாக்கவும் வேண்டும்.

இவ்வாறு, நமது தேசமும் விடுதலை புலிகள் அமைப்பும் நமது

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழீழம் பத்திரிகையின் ஒருவருட நிறைவையொட்டி. . .

அன்பான வாசகரே!

தமிழீழம் ஆசிரியர் குழுவின் நல்வாழ்த்துக்கள் தங்களுக்கு உரித்தாகட்டும். தமிழீழ விடுதலைப் போராட்டம் பாரிய மாற்றங்களுக்கும் வளர்ச்சிக்கும் உள்ளாகியிருக்கும் நிலையில், தேசவிடுதலைப் போராட்டத்தில் அரசியலில் பன்முகத்தன்மையையும் ஜனநாயகத்தையும் ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு தமிழீழ மக்கள் கட்சியின் கொள்கையை மக்களுக்கு கொண்டு செல்லும் அரசியல் ஊடகமாக தமிழீழம் பத்திரிகையை நாம் வெளிக்கொணர்ந்தோம். 2000 ஏப்ரல் 15ம் திகதியுடன் பத்திரிகைக்கு ஒரு வருடம் பூர்த்தியாகிறது. இந்த வெற்றியை நாமனைவரும் ஒருமித்த உணர்வுடன் கொண்டாடுவோம்.

பத்திரிகைகள் தமது வருடாந்த வெற்றிகளைக் கொண்டாடுவது சகஜமே. எனினும் தமிழீழம் பத்திரிகையைப் பொறுத்தவரையில் இது குறிப்பிடத்தக்க வெற்றியென்றே கூறவேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இன்றைய குறிப்பான சூழலில், எதிரியின் அழித்தொழிப்பு உச்சத்தில் நிலவும் அதே சமயம் போராட்டத்தின் அகவாழ்விலும் அரசியல் ஜனநாயகமற்ற தன்மை மேலோங்கியிருக்கும் நிலையில் இத்தகைய பத்திரிகையொன்று ஒருவருடம் தொடர்ச்சியாக வெளிவந்திருப்பது குறித்து அதன் வெளியீட்டாளரான நாமும் வாசகரான நீங்களும் ஒரு சேர பெருமிதங்கொள்ள முடியும். இப்பத்திரிகையின் தொடர்ச்சிக்கு வாசகரின் பங்களிப்பும் உற்சாகமூட்டலும் குறிப்பான பங்காற்றி வந்திருப்பதை இவ்விடத்தில் நாம் நன்றியுடன் குறித்துக் கொள்கிறோம்.

தாயகத்தில் நிலவும் யுத்த கெடுபிடிகளுக்கு மத்தியிலும், பாதுகாப்பற்ற நிலையிலிருந்து கொண்டும் பத்திரிகையை வாசித்து, தேசத்தின் அக - புற நிலைகளை அடிப்படையாகக் கொண்டு கருத்துகளை தெரிவித்து வரும் வாசகர்களுக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். தேசத்தின் ஜீவாத்மா அரசியல் தன்மை பெற்று பத்திரிகையில் வெளிப்படுமானால் அப்பெருமைக்கு உரித்துடையவர்கள் இவர்களே. அதேபோல், புலம் பெயர் நாடுகளிலிருந்து எமக்கு தொடர்சியான அபிப்பிராயங்கள் கூறி பத்திரிகையின் பண்பை செழுமைப்படுத்தவும், தொடர்ச்சியான வெளியீட்டுக்கான நிதி மற்றும் பொருள்வகை பங்களிப்புகளை செய்துவருவோரையும் நாம் நன்றியுடன் நினைவு கூர்கிறோம்.

பத்திரிகையின் அரசியலை முன்னோக்கி நகர்த்தும் விதமாக மக்கள் களம் பகுதிக்கு வாசகர் மத்தியிலிருந்து வரும் கேள்விகளும் கருத்துகளும் எம்மை உற்சாகப்படுத்துவதுடன் மேலும் புதிய கோணங்களில் சிந்திக்கத் தூண்டுகின்றன என்பதையும் இங்கு தெரிவித்துக் கொள்கிறோம். எழுத்து மூலம் கிடைக்கப் பெறும் அபிப்பிராயங்களைப் போல் வாசகருடனான நேரடி உரையாடலிலிருந்து கிடைக்கப் பெறும் கருத்துகளுக்கும் செவிவழி கிடைக்கப்பெறும் கருத்துகளுக்கும் நாம் உரிய முக்கியத்துவம் வழங்குகிறோம். எனினும் கடந்த காலத்தில் மக்கள் களம் பகுதியில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு நாம் பத்திரிகையூடாக நேரடியாக பதிலளிப்பதை தவிர்த்து வந்திருக்கிறோம். இப்போக்கு பத்திரிகைக்கும் வாசகருக்கமிடையிலான உரையாடலுக்கு தடையாக இருந்து வந்துள்ளது எனும் அடிப்படையில் இந்த அரசியல் தவறை நாம் உணர்வதுடன் அதற்காக சுயவிமர்சனம் செய்து கொள்கிறோம்.

தாயகத்திலும் புலம்பெயர் வாழ்விடங்களிலுமுள்ள அநேகமான வாசகர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றிய எமது அரசியல் நிலைப்பாட்டை அறிந்துகொள்ள தொடர்ந்தும் ஆர்வங்காட்டி வருகின்றனர். எமது அரசியலை நேர்மையாகவும் தெளிவாகவும் பகிரங்கப்படுத்துவதன் மூலம் மக்களது அங்கீகாரத்தைப் பெறுவதே எமது அரசியலின் உண்மையான வெற்றியாயிருக்கும் என்பதில் தான் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். ஏனைய அமைப்புகளது செயற்பாடுகள் தொடர்பான எமது கருத்துகளை தேச நலனின்பாற்பட்டு பத்திரிகையில் வெளியிடுவோம்.

மக்களது பங்குபற்றலை மையமாகக் கொண்ட போராட்ட தலைமையை உருவாக்க வேண்டும் என ஆர்வம் கொண்டிருக்கும் கட்சியின் அரசியல் பத்திரிகையை வெளியிடும் நாம் எதிர்காலத்தில் கூடியவரையில் தங்களுடனான மனந்திறந்த உரையாடலினூடாக மக்கள் அதிகார அரசியல் பற்றிய கருத்தாக்கங்களை பத்திரிகையில் வெளிக்கொணர விரும்புகிறோம். இதற்கு வாசகரின் பங்களிப்பு அடிப்படையாகும்.

வாசகரின் கருத்தை விரிவாகப் பெறுவதற்கு பத்திரிகையின் விநியோகத் தளத்தை விரிவாக்க வேண்டும். எனினும் எமது இன்றைய நிலையில் எமக்கு விநியோகத்திற்கான மார்க்கங்கள் மிகவும் அரிதாகவேயுள்ளன. தளத்தில் செயற்படும் எமது தோழர்களும், முகமறியாத எமது ஆதரவாளர்களும் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியிலும் தான் இப்பத்திரிகையை தங்களுக்கு கிடைக்கச் செய்கின்றனர் என்பதையும் இவ்விடத்தில் சுட்டுகிறோம். இதற்காக எமது தோழர்களினதும் ஆதரவாளர்களினதும் உழைப்பை கௌரவிப்பதுடன் பத்திரிகையை வாசிப்பதிலும் பாதுகாப்பதிலும் தாங்கள் செலுத்தும் உழைப்பையும் எதிர்கொள்ளக் கூடிய பாதுகாப்புச் சிக்கல்களையும் எம்மால் உணரக் கூடியதாயுள்ளது. எனவே முடிந்தவரையில் எமது செயற்பாட்டின் பலனை மொத்த தேசமும் அறுவடை செய்யும் வகையில் பிரயோசனமுடையதாக்குவது எமது கடமையென உணர்கிறோம். தற்போதைக்கும் நாம் தாயகத்தின் அனைத்துப்பகுதிகளுக்கும் எமது சக்திக்குட்பட்ட வரையில் பத்திரிகையை பரவலாக்கி வருகிறோம். அதே போல் ஈழத் தமிழர் பரந்து வாழும் தமிழகம் உட்பட அனைத்து புலம் பெயர் நாடுகளிலும் பத்திரிகை விநியோகம் நடைபெறுகிறது.

தேசவிடுதலைப் போராட்டம் அதன் உச்சத்தில் நிலவும் இன்றைய கட்டத்தில் தேசத்தின் அரசியலை உயர்த்திப்பிடிப்பதனூடாக எதிரியின் அனைத்து ஆக்கிரமிப்பு வழிமுறைகளையும் அரசியல் தளத்தில் அம்பலப்படுத்துவதையும் விடுதலைப்போராட்டத்தில் தமிழ் தேசத்தின் அனைத்து சக்திகளையும் ஓரணி திரட்டுவதையும் எமது உடனடிப் பணியாகக் காண்கிறோம். அதேபோல் தேசத்தின் அகவாழ்வில் நிலவும் அடக்குமுறைகளுக்கெதிராக விட்டுக்கொடாது தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுத்திட வேண்டும் என்பதில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் நாம் சித்தாந்தப் போராட்டத்திற்கான ஊடகமாக பத்திரிகையை தொடர்ந்தும் பயன்படுத்துவோம்.

நமது போராட்டம் பன்முகத்தன்மையானது. அதற்கேற்ப எமது பத்திரிகையின் அரசியல் தளத்தை விரிவாக்குவதற்கு தங்களின் ஒத்துழைப்பை வேண்டுகிறோம். மக்களின் பலத்தில் தங்கிநின்று எமது பயணத்தைத் தொடர்வதென உறுதியேற்கிறோம்.

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்.

தோழமையுடன்
சுபத்திரா
ஆசிரியர்-தமிழீழம்-15. 04. 00

## விடுதலை... *(2ஆம் பக்க தொடர்ச்சி)*

செயற்பட்டு வருகின்றது. தற்போதுள்ள கடுரமான நெருக்கடிக்கு மத்தியில் மக்களின் நலனின் நின்று மக்களுக்காக செயற்படும் ஒரு புரட்சிகர கட்சியானது செயற்படுவதிலுள்ள ஆபத்துக்களை நீங்கள் நன்கு அறிவீர்கள். இதனால் நாம் எதிர்பார்த்த வேகத்திலும் பரந்த பரப்பிலும் செயற்பட முடியாதுள்ளதையும் நீங்கள் அறிவீர்கள். இன்றைய வித்து நாளைய விருட்சம். நமது மக்களுக்கும் உலகுக்கும் பயன்தர பல விருட்சங்கள் உருவாகட்டும். நம் தேசம் இன்று ஒரு சவாலை எச்சரிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டும் என எமது கட்சியானது மக்களை எச்சரிக்கின்றது. சிறிலங்கா அரசும், இந்திய மற்றும் ஏகாதிபத்திய அரசுகளும் வெவ்வேறு நோக்கங்களுடன் அதேசமயம் ஒரு பொது இலக்குடன் எம்மை நெருங்குகின்றன. நாம் மிகவும் பலமாக எம்மை நிலைநாட்டிக்கொண்டு இந்த சவால்களை எதிர்கொள்ள வேண்டும். இந்த திசையில் எமது கட்சிக்குரிய முதன்மையான கடமை என்னவென்பதை புரிந்து கொண்டு நாம் செயற்பட்டு வருகின்றோம்.

நமது தேசத்திலுள்ள அனைத்து மக்களையும், தேசவிடுதலைச் சக்திகளையும் ஒன்றிணைப்பதிலும். மக்கள் மத்தியில் இன்று வெடித்தெழுகின்ற மக்கள் போராட்டங்களை தேசத்தின் அரசியல் திரட்சியாக்குவதிலும், விடுதலைப்புலிகள் நடாத்தும் ஆளுங்குழுமங்களுக்கு எதிரான எல்லாவிதமான ஆயுதப்போராட்டங்களை எந்த விதத்திலும் பலவீனப்படுத்தாமலும், ஆதரித்தும், எமது போராட்டத்தை பலவீனப்படுத்தக்கூடிய எல்லாவிதமான தவறான செயற்பாடுகளை தயங்காது சுட்டிக்காட்டியும் வருகின்றது. தற்போது நமது தேசம் எதிர்கொண்டுள்ள சவாலை வெற்றிகரமாக முறியடிப்பதற்கு எமது தேசத்தில் சார்பில் அதன் ஒவ்வொரு தரப்பினாலும் மேற்கொள்ள வேண்டிய அவசரமான, அத்தியாவசியமான கடமைகளை வலியுறுத்தியும், அவற்றில் முழுமையாகவும், முனைப்பாகவும் நாமே நேரடியாக ஈடுபட்டும் தமிழீழ மக்கள் கட்சி தனது இன்றைய வரலாற்று கடமையை செய்து வருகின்றது. தொடர்ந்தும் செய்யும். இப்பொது இலக்கிலும் செயற்பாடுகளிலும் இணைந்து கொள்ளுமாறு அனைவரையும் அறைகூவுகின்றோம்.

தருமு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழீழ விடுதலை போராட்டத்தில் விடுதலை புலிகள் — 01




# வெகுஜன போராட்டங்களும் விடுதலைபுலிகளும்

ஒவ்வொரு அரசியல் போராட்டமும் மக்களினால் முன்னெடுக்கப்படுகின்றது, மக்களினால் ஆதரிக்கப்படுகின்றது, மக்களின் அர்ப்பணிப்புக்குள்ளாகின்றது, ஈற்றில் மக்களினால் வெற்றியடைகின்றது. சுருங்கக் கூறினால் ஒவ்வொரு போராட்டமும் மக்களில் தங்கியிருக்கின்றது. மனித வரலாற்றில் இடம்பெற்ற, வெற்றி பெற்ற ஒவ்வொரு போராட்டத்திற்கும் இந்த உண்மை பொருந்தும்.

ஒரு அரசியல் போராட்டம் மக்களில் தங்கியிருக்கிறது என்பதன் மூலம் விளங்கிக் கொள்ளக் கூடியவை எவை? முதலாவதாக, அரசியல் அமைப்புக்களின் உறுப்பினர்களாக மக்களின் ஒரு பிரிவினரே அமைகின்றார்கள், அதாவது ஒரு அரசியல் நிறுவனத்திற்குரிய மனித வளங்களை மக்களே வழங்குகின்றார்கள். இரண்டாவதாக, ஒரு அரசியல் நிறுவனத்தை ஆதரிப்பது, அதற்கு அவசியமான பொருள்வகை வளங்களை வழங்குவது. போன்றவற்றை மக்களே மேற்கொள்கின்றார்கள். மூன்றாவதாக, மக்கள் தமது வரலாற்றினூடாக அடைந்திருக்கின்ற வளர்ச்சிகள், அனுபவங்கள்.. போன்ற அனைத்தையும் அரசியல் நிறுவனங்கள் சுவீகரித்துக் கொள்கின்றன. நான்காவதாக ஒரு போராட்டச் சூழலில் ஏற்படுகின்ற இழப்புகள், கொடுமைகள், துயரங்கள்.. போன்ற அனைத்தையும் தாங்குகின்ற உயிர்ப்பான "தாங்கற் கரைசலாக" மக்களே அமைகின்றார்கள். இறுதியாக இவை அனைத்துக்கும் மேலாக, மக்கள் தாமே நேரடியாக, திரளாக போராட்டத்தில் பங்கு கொள்வதன் மூலம் அதன் இறுதி வெற்றியை தீர்மானிக்கின்றார்கள். இவ்வாறு மக்களே ஒரு அரசியல் போராட்டத்தின் அடித்தளமாகவும் தீர்மானகரமான சக்தியாகவும் விளங்குகின்றார்கள்.

இந்த உண்மைகளை தமிழ்த்தேச அரசியலிலும் பொருத்திப் பார்க்க முடியும். நமது மக்கள் தமது அரைநூற்றாண்டுக்கும் மேற்பட்ட தமிழ்தேசிய இயக்கத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளுக்கும் ஆயுத போராட்ட அமைப்புக்களுக்கும் பூரண ஆதரவை வழங்கி வந்திருக்கின்றார்கள். தமது புதல்வியர்களையும புதல்வர்களையும் சகோதர, சகோதரிகளையும் கணவர்களையும் மனைவிகளையும் ஆயிரக்கணக்கில் போராட்டத்திற்கு அனுப்பி வைத்திருக்கின்றார்கள், இப்போதும் அனுப்பி கொண்டிருக்கின்றார்கள். சிறிலங்கா படைகளினதும் சிங்கள இனவாத கும்பல்களினதும் கோரத் தாக்குதல்களினால் பல்லாயிரக்கணக்கில் தமது உயிர்களை இழந்துள்ளார்கள். தமது இருப்பிடங்களை துறந்தும் அகதி முகாம்களிலும் துயரங்கள் மற்றும் அவமானங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள். இத்தனைக்கு மத்தியிலும் தமிழீழ போராட்டத்தை தாங்கி பிடிப்பவர்களாகவும் அதன் உயிர்த்துடிப்பை அணையாது காப்பவர்களாகவும் நமது மக்களே விளங்குகின்றார்கள். நமது மக்களின் தேசிய எழுச்சியும் அவர்களின் இத்தனை மகத்தான தியாகங்களும் இல்லையென்றால், இன்றுள்ள எந்தவொரு தமிழ் கட்சியும் ஆயுதப் போராட்ட அமைப்பக்களும் தோன்றியிருக்கவே முடியாது.

எனினும் தமிழ்த்தேச அரசியலில் நமது மக்கள் கொண்டுள்ள இத்தகைய அடிப்படை பாத்திரம், இன்றுவரை தமிழ் அரசியல் அமைப்புக்களினால் புரிந்து கொள்ளப்படவோ, முக்கியப்படுத்தப்படவோ இல்லை. மாறாக, நமது மக்கள் வெறும் பார்வையாளர்களாக, "உயிர்ப்பற்ற" ஆதரவாளர்களாக செயற்படும்படி நிர்ப்பந்திக்கப்பட்டு வந்திருக்கின்றார்கள். தமது சொந்த அரசியலை தீர்மானிப்தற்கு நமது மக்கள் கொண்டிருக்கின்ற உரிமை முற்றாக மறுக்கப்பட்டு வந்திருக்கின்றது. அரசியல் அமைப்புக்களின் கருத்தியல் மற்றும் பௌதீக ரீதியிலான அடக்குமுறைகளுக்குட்பட்டு அடங்கிக் கிடக்கும் நிலைக்கு நமதுமக்கள் உள்ளாக்கப்பட்டு வந்திருக்கின்றார்கள். முன்னர் தேர்தல் அரசியல் முன்னெடுக்கப்பட்ட காலங்களில் தமிழ்கட்சிகளுக்கு வாக்களிப்பவர்களாக மட்டும் நமது மக்களின் அரசியல் பாத்திரம் பெரிதும் வரையறுக்கப்பட்டிருந்தது. பின்னர் ஆயுதப் போராட்டம் பிரதான போராட்ட வடிவமாக மாறியபோது, ஆயுதப் போராட்ட அமைப்புக்களுக்கு மனித வளங்கள் உட்பட அனைத்து வளங்களையும் ஒத்துழைப்புக்களையும் வழங்க வேண்டியவர்களாக நமது மக்கள் மாற்றப்பட்டார்கள். இவ்விரு சந்தர்ப்பங்களிலும் நமது மக்களின் சுயமான போராட்டங்களோ, முன்னெடுப்புகளோ அனுமதிக்கப்படவில்லை. மாறாக, அரசியல் அமைப்புக்கள் தாம் விரும்புகின்ற விதத்தில் நமது மக்களின் அரசியல் பங்களிப்பை தீர்மானித்தன, தீர்மானிக்கின்றன.

இவ்வாறு மக்களை முதன்மைப்படுத்தாத, மக்களின் சுயமான, உயிர்ப்பான பங்குபற்றலை அனுமதிக்காத அரசியல் போக்கு அனேகமாக அனைத்து அரசியல் அமைப்புக்களிலும் காணப்பட்டது. இத்தகைய அரசியல் பாரம்பரியத்தின் ஒரு பிரதிநிதியாகவே, விடுதலைப் புலிகள் இயக்கமும் தன்னை அடையாளப்படுத்தியிருக்கின்றது.

எனினும் ஏனைய போராட்ட அமைப்புக்களுக்கும் புலிகள் அமைப்புக்கும் இடையே பின்வரும் அம்சங்களில் மிகத் தெளிவான வேறுபாடுகள் காணப்படுகின்றன. தமிழ்த் தேசம் தனது விடுதலையை பெற வேண்டுமாயின் சிறிலங்கா அரசுக்கு எதிராக ஆயுத ரீதியிலும் போராட வேண்டும் என்ற வரலாற்று அவசியத்தை, அரசியல் விதியை விடுதலைப் புலிகள் மட்டுமே உறுதியாக பின்பற்றி வருகின்றார்கள். தமிழ்த் தேசத்தின் அடிப்படை அரசியல் கோரிக்கையான தமிழீழவிடுதலை என்பதையும் அதற்கான வீரஞ்செறிந்த போராட்டத்தையும் விடுதலை புலிகள் உறுதியாக முன்னெடுத்து வருகின்றார்கள். தேசியரீதியிலும் சர்வதேசரீதியிலும் நமது மாபெரும் தேசவிடுதலை போராட்டத்தின் உயிர்ப்பான சின்னமாக அவர்கள் விளங்குகின்றார்கள். இவ்வாறு தமிழ்த்தேச அரசியலில் தம்மை ஆழ நிலைநாட்டியிருப்பதுதான், விடுதலை புலிகளின் பலத்திற்கும் அவர்கள் நமது மக்களினால் தாங்கப்படுவதற்கும் தமிழ்த்தேசத்தின் அரசியல் வரலாற்றில் கௌரவமிக்க வார்த்தைகளினால் குறிக்கப்படவிருப்பதற்கும் காரணமாக அமைந்திருக்கின்றது.

விடுதலை புலிகள் இயக்கம் இராணுவரீதியாகவும் மனவலிமை, அர்ப்பணிப்பு, போர்த்திறன் என்பவற்றிலும் மிக உயர்ந்த நிலையை வகிக்கின்றார்கள். இத்தய பெருமைக்குரிய பண்புகளை கொண்டிருந்தும், போராட்டதில் மக்களுக்குள்ள பாத்திரம் குறித்து அவர்கள் கொண்டிருக்கின்ற நிலைப்பாடுகள் காரணமாக, ஜனநாயக விரோதமும் எதேச்சாதிகார போக்கும் கொண்ட இராணுவவாத அமைப்பாக தம்மை வெளிப்படுத்தி வந்திருக்கின்றார்கள். மக்கள், போராட கூடிய ஆற்றல் அற்றவர்கள் என்றும் தமது கட்டளைக்கு கீழ்படிய வேண்டியவர்கள் என்றும் விடுதலை புலிகள் கருதி, செயற்பட்டு வருகின்றார்கள். தமிழ் மக்களின் ஒரே அரசியல் பிரதிநிதியாக தம்மை நிலைநிறுத்துவதற்கு அவர்கள் தீவிரமாக முயற்சித்து வந்திருக்கின்றார்கள். தமக்கு வெளியே, தமது கட்டுப்பாட்டிற்குட்படாமல் போராட்டத்தில் பங்கு கொள்வதற்கு யாருக்குமே உரிமை கிடையாது என்பதை கடுமையாக செயற்படுத்தி வருகின்றார்கள். விடுதலை புலிகளின் தேவைக்கேற்ப போராட்டத்தில் பங்கு கொள்வதும் மனித வளங்களையும் ஏனைய வளங்களையும் உதவிகளையும் வழங்குவதுமே போராட்டத்தில் மக்கள் ஆற்ற வேண்டிய பங்களிப்பு என்று அவர்கள் தெளிவாக வெளிப்படுத்தி வந்திருக்கின்றார்கள். விடுதலைப் புலிகளிடம் நிலவுகின்ற இத்தகைய கண்ணோட்டங்களின் காரணமாக அவர்கள் தமது சொந்த மக்களை மட்டுமன்றி, ஏனைய சமூகங்களையும் அடக்க முயற்சிப்பவர்களாகவும் அவர்கள் மீது வன்முறை தாக்குதல்களை மேற்கொள்பவர்களாகவும் மாறியிருக்கின்றார்கள்.

விடுதலை புலிகள் இயக்கத்திடம் ஆழப் புதைந்துள்ள இராணுவவாத கண்ணோட்டத்தின் விளைவாக, சிறிலங்கா படைகளை இராணுவரீதியில் வெற்றி கொள்வதால் மட்டும் தமிழீழ விடுதலையை பெற்று கொள்ள முடியும் என்று அவர்கள் நம்புகின்றார்கள். எனவே இராணுவ தாக்குதல்களில் தீவிரமாகவும் உறுதியாகவும் ஈடுபட கூடிய உறுப்பினர்களை அதாவது இளவயதுள்ளவர்களை அமைப்புக்குள் உள்வாங்குவதில் அக்கறை கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு புதிய உறுப்பினர்களை உள்வாங்குவதற்காக, மக்கள் மத்தியில் அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பதிலாக, தமிழர்கள் மீது சிறிலங்கா படைகளும் ஏனைய வன்முறை அமைப்புக்களும் மேற்கொள்கின்ற தாக்குதல்களில் தங்கியிருக்கின்றார்கள்.

இவ்வாறு தமிழீழ விடுதலை போராட்டத்தில் மக்களின் பங்க-

www.tamilarangam.net

## அரசியல்... (3ஆம் பக்க தொடர்ச்சி)

தேசத்தின் நலன் சார்ந்தும் ஏனைய தேசங்களின் நலன்கள் சார்ந்தும் வெளிப்படுத்துகின்ற உறுதியான-தும் நேர்மையானதுமான நிலைப்பாடுகள், அரசியல் பேச்சுவார்த்தை தளத்தில், விடுதலை புலிகளின் பலத்தை பன்மடங்கு உயர்த்தும். சர்வதேச சமூகங்கள் மத்தியில், நமது தேசத்தினதும் விடுதலை புலிகள் அமைப்பினதும் ஜனநாயகப் பண்புகள் குறித்த ஈர்ப்பை இது ஏற்படுத்தும்.

விடுதலை புலிகள் அமைப்பின் அரசியல் கண்ணோட்டமும் நமது தேசத்தின் பெரும்பான்மை மக்களின் அரசியல் கண்ணோட்டமும் கணிசமான அளவில் வேறுபட்டிருப்பதை புரிந்து, ஏற்று, இந்த இடைவெளியை கடப்பதற்கான ஒரு முறைமையை விடுதலை புலிகள் அமைப்பு மேற்கொள்ள வேண்டும். இவ்வகையில் நமது தேசத்தின் அரசியல் அபிலாஷைகளை ஒன்றுதிரட்டுவதற்கும் இதன் மூலம் நமது தேசநலன் சார்ந்து, நமது கோரிக்கைளை சாரப்படுத்துவதற்கும் இக்கோரிக்கைகளையே அரசியல் பேச்சுவார்த்தையில் முன்வைத்து போராடுவதற்குமான பாரிய கடப்பாடு தமக்கு உண்டு என்பதை விடுதலைப் புலிகள் அமைப்பு உணர்ந்து கொள்ள வேண்டும், அதற்கேற்ப தமது செயற்பாடுகளை வகுக்க வேண்டும். .

இவ்வாறான ஒரு முறைமைக் கூடாகவே, பேச்சுவார்த்தையின் போது நமது தேசிய உரிமைகளை வலுவாக நிலைநாட்ட முடியும். இதற்கு மாறாக, விடுதலை புலிகளுடனான அரசியல் முரண்பாடுகளினால் பாதிப்புற்று, அந்த அமைப்புக்கு எதிரான நிலைப்பாட்டை ஏனைய அமைப்புகள் எடுப்பதோ, அல்லது ஏனைய தமிழ் அரசியல் அமைப்புகளும் நமது மக்களும் முன்வைக்கின்ற கோரிக்கைகளை விடுதலை புலிகள் அமைப்பு நிராகரித்து, தனது சொந்த கோரிக்கைகளை முன்வைப்பதோ, பேச்சுவார்த்தை மேசையில் விடுதலைப் புலிகள் அமைப்பு பலவீனப்படவும் இறுதியில் நமது தேசத்தின் நலன்களை கடுமையாக பாதிக்கவும் செய்து விடும்.

நமது அரசியல் கோரிக்கைகளை நாம் தெளிவாக வரையறுப்போம். இவ்வாறு வரையறுக்க முயற்சிக்கும்போது, 1985ல் நாம் திம்பு-பேச்சுவார்த்தையில் முன்வைத்த கோரிக்கைகளின் உயர்ந்த வடிவத்தை நமதுதேசம்இப்போது அடைந்து விட்டது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இந்த 15 வருட காலத்தில் நமதுமக்கள், சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தினூடாக, ஒரு இறைமைமிக்க தேசமாக பரிணமித்து விட்டார்கள். ஒவ்வொரு தேசமும் பெற்றிருக்கின்ற பிரிக்க முடியாத உரிமையான தனியான அரசை கொண்டிருப்பதற்கான உரிமையோடு, அனைத்து அரசியல் உரிமைகளையும் நமது சொந்த முடிவின்படி நடைமுறைப்படுத்துவதற்கான பாத்தியதை நமது மக்களுக்கும் உண்டு.

நாம் ஒரு தனியான தேசமாக உருவாகி, நமக்கென சொந்த அரசை உருவாக்குவதற்கான இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளோம் என்ற எதார்த்தத்தை நாம் தெளிவாக உட்செரித்து கொள்ள வேண்டும். நாம் ஒரு தேசியஇனம் என்று சிறீலங்காவின் அரசியல் சாசனத்தில் குறிக்கப்பட வேண்டும் என்ற எல்லையை தாண்டி, ஒரு தனியான தேசமாக தேசங்களின் ஒன்றியத்தில் (ஐ.நா.சபையில்) குறிக்கப்படக் கூடிய நிலையை அடைந்து விட்டோம். மிக உறுதியாக நிலைநாட்டப்பட்டு விட்ட இந்த உண்மைகளை எம்நினைவில் ஆழப்பதிப்போம்.

திம்புக் கோரிக்கைகளின் ஒரு அம்சமாகவுள்ள, "மலையகத் தமிழர்களுக்கு பிரஜா உரிமை வழங்கப்பட வேண்டும்" என்ற கோரிக்கை தொடர்பாக நாம் ஒரு முடிவை எடுக்க வேண்டும். இன்றைய சூழலில் மலையகத்தமிழர்கள் தம்மை ஒரு தனியானதேசமாக அடையாளம் காணவும் ஒன்று திரளவும் ஆரம்பித்து விட்டார்கள். தமக்கென தனியான அரசியல் அதிகார அலகை பெறுதல் என்பதை அவர்கள் தமது நிகழ்ச்சிநிரலில் ஏற்கனவே இணைத்து விட்டார்கள். தமது அரசியல் உரிமைகளுக்கான போராட்டங்களில் அவர்கள் பெருமைக்குரிய வெற்றிகளை அடைந்திருக்கின்றார்கள். இவ்வாறான நிலையில் அவர்களின் பிரஜா உரிமை விடயத்தை நமது கோரிக்கைகளுடன் இணைப்பது என்பது, அவர்களின் நலன்களில் நாம் கொண்டிருக்கின்ற அக்கறையை வெளிப்படுத்தவில்லை. மாறாக, அவர்களின் அரசியல் உணர்வையும் போராட்ட வலிமையையும் மறுத்து, அவர்கள் தொடர்பாக நாம் "பெருந்தன்மையுடன்" நடந்து கொள்கிறோம் என்பதையே இது குறிக்கின்றது.

இத்தகைய பின்புலத்தில், நாம் முன்வைக்கக் கூடிய அரசியல் கோரிக்கைகளில் பின்வரும் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்:

1. ஈழத்தமிழர்கள் ஒரு தனியான தேசம்.

2. ஈழத்தமிழர்கள் தமக்கென ஒரு தனியான தேச-அரசை அமைக்கும் உரிமை உடையவர்கள்.

3. தற்போது வடக்கு-கிழக்கு என்று அழைக்கப்படுகின்ற ஆள்புல எல்லைகள் அங்கு பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற தமிழ், மற்றும் முஸ்லிம் தேசங்களின் தாயகமாகும்.

இக்கோரிக்கைகளில் நாம் தெளிவாகவும் உறுதியாகவும் இருப்போம். எமது கோரிக்கைகள் தேசங்களின் ஒன்றியத்தினால் (ஐ.நா.சபையினால்) ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்ற சரத்துக்களிலிருந்து வேறுபடவில்லை என்பதையும் எந்தவொரு தேசத்திற்குமுரிய, ஏற்றுக்கொள்ளப்பட்டதும் அதன் பிறப்புடன் இணைந்ததுமான உரிமைகள் தவிர்ந்த வேறெதையும் நாம் கோரவில்லை என்பதையும் தெளிவாக பிரச்சாரப்படுத்துவோம். சர்வதேச சமூகங்களின் அநுதாபத்தையும் ஆதரவையும் திரட்ட கூடிய வெகுஜன நடவடிக்கைகளிலும் சர்வதேச அரசுகளின் அக்கறையை பெறக் கூடிய இராஜதந்திர நடவடிக்கைகளிலும் நாம் முரணற்றும் அரசியல் நேர்மையுடனும் ஈடுபடுவோம்.

ஒருதேசம் என்றவகையில் நாம், யுத்தகளத்தில் மட்டுல்ல, பேச்சுவார்த்தை என்ற நேரடி அரசியல் களத்திலும் மனவலிமையுடனும் விட்டுக் கொடுக்காமலும் போராடக் கூடியவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். நமது மக்களின்பால், சகதேசங்களின்பால், சர்வதேச சமூகங்களின்பால் நாம் எவ்வளவு ஜனநாயகபூர்வமான அணுகுமுறைகளைக் கொண்டிருக்கின்றோம் என்பதை எமது ஒவ்வொரு வார்த்தைகளும் வெளிப்படுத்த வேண்டும். அரசியல் பேச்சுவார்த்தையின் இறுதிவரை கலந்து கொள்வது மட்டுமல்ல, இப்பேச்சுவார்த்தையானது நமது தரப்பினால் குழப்பப்பட மாட்டாது என்பதையும் நாம் உறுதியாக வெளிப்படுத்த வேண்டும்.

எனினும் அரசியல்பேச்சுவார்த்தை என்பது, போராட்டத்தின் ஒரு வடிவம் மட்டுமே. இதன்மூலம் நமது தேசத்தின் நலன்களையும் உரிமைகளையும் வென்று கொள்வதற்காக போராடுகின்ற அ தே வே ளை , இப்பேச்சுவார்த்தகைளில் சிறிலங்கா அரசு நேர்மையான எண்ணத்துடன் கலந்து கொள்ளாது என்பதிலும். நமது மக்கள்மீது பாசிச இன அழிப்பை மேற்கொள்வதற்கான தயாரிப்புகளில் ஈடுபட்டவாறே, இப்பேச்சுவார்த்தைகளில் அது கலந்து கொள்ளும் என்பதிலுமு உறுதியாக இருப்போம். இவ்வாறான நிலையில், அதன் உண்மைத் தோற்றத்தை சர்வதேச சமூகங்கள் மத்தியல் பகிரங்கப்படுத்துவதற்குரிய அரசியல் களமாக, இந்த பேச்சுவார்த்தை மேடையை நாம் பயன்படுத்துகின்ற அதேநேரத்தில், சிறிலங்கா அரசு எம்மீது மேற்கொள்ள கூடிய எந்தவொரு இனஅழிப்பு தாக்குதல்களையும் எதிர்த்து சமாளிக்க கூடிய வகையில், நமது இராணுவ மற்றும் அரசியல் நடவடிக்கைகளை நாம் பேண வேண்டும். சிறிலங்கா அரசு, தனது இனவாத ஆக்கிரமிப்பு தோற்றத்தை சர்வதேச சமூகங்கள் மத்தியில் தானாகவே அம்பலப்படுத்தும் வரை நாம் காத்திருக்க வேண்டும், காத்திருக்கவும் முடியும்.

ஆக்கிரமிப்பு யுத்தத்தின் மூலம் எம்மை வெற்றி கொள்ள முடியாது என்பதை சிறிலங்கா அரசு அவமானகரமான முறையில் உலகுக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. அரசியல் பேச்சு வார்த்தையிலும் கூட, எம்மை வெல்வதற்கு சிறிலங்கா அரசால் இயலாது என்பதை நிரூபிப்போம். அப்போது நமது தேசவிடுதலை அண்மித்திருக்கும்.

**வரதன்**

> முதலில், அரசியல்பேச்சுவார்த்தை என்பது, போராட்டத்தின் ஒரு வடிவம் (ஒரு போராட்ட வடிவமே) என்பதை புரிந்து கொள்வோம். ஒரு தேசத்தின் விடுதலைப் போராட்டமானது, வெகுஜனப் போராட்டங்கள், ஆயுதப்போராட்டம், அரசியல்பேச்சுவார்த்தை, இராஜதந்திர அழுத்தம்.. என வேறுபட்ட வடிவங்களில் முன்னெடுக்கப்படுகின்றது. ஒருதேசத்தின் விடுதலையைப் பொறுத்தவரை, அதன் போராட்ட வடிவங்கள் ஒவ்வொன்றும் சமமுக்கியத்துவமுடையவை. இத்தகைய போராட்ட வடிவங்களில் எதைத் தேர்வு செய்வது என்பது, அப்போராட்டத்தில் பங்கு கொள்கின்ற சக்திகளின் விருப்பத்தினால் தீர்மானிக்கப்படுவதில்லை. மாறாக, ஒவ்வொரு கட்டத்திலும், நிலவுகின்றகுறிப்பான அக, புற சூழ்நிலைகளினாலேயே அக்கட்டத்திற்குரிய போராட்ட வடிவம் (மற்றும் வடிவங்கள்) தீர்மானிக்கப்படுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழீழ... *(5ஆம் பக்க தொடர்ச்சி)*

ளிப்பு குறித்தும் விடுதலையை வென்றெடுப்பது குறித்தும் விடுதலை புலிகள் கொண்டிருக்கின்ற நிலைப்பாடுகளின் காரணமாக அவர்கள் போராட்டத்தில் இருந்து மக்களையும் மக்களில் இருந்து தம்மையும் பிரித்து விட்டார்கள். இதன் காரணமாக விடுதலை புலிகள் முன்னெடுத்து வருகின்ற போராட்டம் வெகுஜன பண்பையும் அரசியல் பண்பையும் இழந்து, ஒரு இராணுவ போராட்டமாக மாற்றம் பெற்றிருக்கின்றது.

தமிழ்த்தேசத்தின் விடுதலை என்பது, சிறிலங்கா படைகளுக்கு எதிராக ஏதாவது ஒரு அமைப்பினால் மேற்கொள்ளப்படுகின்ற இராணுவ தாக்குதலினால் மட்டும் சாத்தியமாக கூடும் என்ற எதிர்ப்பார்ப்பு தவறாக்கப்பட்டுள்ளது. உலக வரலாற்றில் எந்தவொரு கெரில்லா அமைப்பும் இதுவரை பெற்றிராத மாபெரும் வெற்றிகளை சிறிலங்கா படைகளுக்கு எதிரான யுத்தத்தில் விடுதலை புலிகள் அடைந்திருக்கின்றார்கள். உலகின் தலைசிறந்த கெரில்லா அமைப்பு என அவர்கள் கணிக்கப்பட்டுள்ளார்கள். இருந்தும் சிறிலங்கா படைகளை பூரணமாக வெற்றி கொள்ளவோ, சிறிலங்கா படைகளின் ஆக்கிரமிப்பிலிருந்து நமது தேசத்தை விடுவிக்கவோ விடுதலை புலிகளால் இன்னமும் முடியவில்லை. இந்த உண்மை எமக்கு சுட்டிக் காட்டுவதெல்லாம், இராணுவத் தாக்குதல்களினால் மட்டும், சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பிலிருந்து நமது மக்களை விடுவிக்க முடியாது என்பதையே.

ஒரு தேசம் தனது விடுதலையை பெற்று கொள்வது என்பது, தனது ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக, பல்வேறு முனைகளில், பல்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்படுகின்ற கூட்டு விளைவினால் மட்டுமே சாத்தியம் என்பதை வரலாறு மீண்டும் மீண்டும் நிரூபித்து காட்டியுள்ளது. இத்தகைய பன்முக போராட்ட வடிவங்கள் என்பது, வெகுஜன போராட்டங்கள், இராணுவ தாக்குதல்கள், இராஜதந்திர அணுகுமுறைகள், ஆதாரங்களுடன் கூடிய தொடர் பிரச்சாரம், அரசியல் பேச்சுவார்த்தைகள்..என அமைகின்றன.

ஒரு ஆக்கிரமிப்பு படை விடுதலை போராளிகளின் இராணுவத் தாக்குதல்கள் குறித்து எவ்வாறு அஞ்சுகின்றதோ, அதேஅளவுக்கு அப்படைகள் தான் ஆக்கிரமித்துள்ள மக்கள் குறித்தும் அஞ்ச வேண்டும். ஆக்கிரமிப்பு படைகளுக்கு மக்கள் குறித்து ஏற்படுகின்ற இத்தகைய அச்சமானது அவற்றின் சுதந்திரமான நடமாட்டத்தை கட்டுப்படுத்தக் கூடியதாகவும், அவற்றின வெற்றி உணர்வை இல்லாதொழிக்கும் வகையிலும் தீவிரமாக இருக்க வேண்டும். அதேநேரத்தில் ஆக்கிரமிப்பு அரசும் படைகளும் கட்டவிழ்த்து விடுகின்ற கொடூர தாக்குதல்களையும் இனஅழிப்புகளையும் கைவிட செய்ய கூடிய வகைகயில் சர்வதேச சமூகங்கள் மத்தியில் நேர்மையான பிரச்சாரங்களும் விடுதலை போராட்டம் தொடர்பான நியாயத் தன்மைகளும் முன்வைக்கப்பட வேண்டும்.சர்வதேச சமூகங்களின் ஆதரவையும் அனுதாபத்தையும் ஆக்கிரமிப்பு அரசிற்கெதிரான அழுத்தங்களையும் இராணுவ தாக்குதல்களினால் மட்டும் வென்று விட முடியாது. மாறாக மக்கள் சுயமாகவும் தீரத்துடனும் முன்னெடுக்கின்ற வெகுஜன போராட்டங்கள்தான் இவற்றை பெற்று தரக் கூடியன.

அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக வியட்னாமிய போராளிகள் மேற்கொண்ட இாணுவ தாக்குதல்கள் ஏற்படுத்திய தாக்கத்தை விட, அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக, வியட்நாமிய பிக்குகள் மேற்கொண்ட, தம்மைதாமே தீயிட்டு தற்கொலை செய்து கொண்ட போராட்டமும், வியட்நாமிய மக்களின் உறுதிமிக்க வெகுஜனபோராட்டங்களும், அமெரிக்க அட்டுழியங்கள் குறித்து முன்னெடுக்கப்பட்ட ஆதாரங்களுடன் கூடிய விரிவான பிரச்சாரங்களும் அமெரிக்க அரசையும் அதன் படைகளையும் கடுமையாக பாதித்தன. இறுதியில் வியட்னாமிலிருந்து அவற்றை வெளியேறும்படி செய்தன. இதேபோன்று பாலஸ்தீன போராட்டம் சர்வதேச அக்கறையை பெற்றதற்கு, இஸ்ரேல் படைகள் மீதான பாலஸ்தீன போராளிகளின் இராணுவ தாக்குதல்கள் மட்டும் காரணமாகவில்லை. "இந்திபாதா" என்னும் கவண் மற்றும் கற்கள் கொண்டு சிறுவர்கள் நடத்திய போராட்டம் பிரதான காரணியாக அமைந்தது. பாலஸ்தீன குடியிருப்புகளில் நடமாடுவதற்கு அஞ்ச வேண்டிய நிலையில் ஒவ்வொரு இஸ்ரேலிய படையினனும் வைக்கப்பட்டான்.

இவ்வித வரலாற்று அனுபவங்கள் அனைத்தும், ஒரு தேசத்தின் விடுதலைக்கு இராணுவ தாக்குதல்கள் மட்டும் போதுமானவை அல்ல என்பதையும் வெகுஜனரீதியான போராட்டங்களும் போராட்டம் சர்வதேசமயப்படுவதும் அவசியம் என்பதையும் உணர்த்தி நிற்கின்றன. இந்த உண்மைகளை விடுதலை புலிகளும் புரிந்து கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டது. சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்புக்கு எதிராக தயாராக உள்ள தற்கொலை போராளிகளினதும் விடுதலை போராளிகளினதும் அளப்பரிய அர்ப்பணிப்புகளும் தியாகங்களும் அர்த்தமுள்ளதாக்கப்பட வேண்டும். சிறிலங்கா படைகளுக்கு எதிராக தாம் பெற்றுள்ள கீர்த்திமிக்க வெற்றிகளின் பினனும் நமது தேசத்தின் விடுதலை சாத்தியமாகவில்லை என்ற உண்மையினை அடிப்படையாக கொண்டு, தமது வெற்றியிலிருந்து விடுதலை புலிகள் அனுபவங்களை பெற வேண்டும். மறுபுறம் தமது கட்டுப்பாட்டிற்கு வெளியேயுள்ள தமிழர்களினால், சிறிலங்கா அரசுக்கு எதிராக அதிகரித்த அளவில், தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்ற எதார்த்தத்தை விடுதலை புலிகள் புரிந்து கொள்ள வேண்டும். இதன்மூலம் மக்களின் போராட்ட உணர்வையும் போராட்ட ஆற்றலையும் புரிந்து கொள்கின்ற அதேநேரத்தில், தமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் மக்களின் சுயாதீனமான போராட்டங்களுக்கு தான் விதித்துள்ள தடை குறித்தும் விடுதலை புலிகள் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

தாம் தமிழ் தேசத்திக் ஒரு பிரிவினரே என்பதையும் தம்மை அழியாது, பாதுகாத்து, வளர்த்து வருபவர்கள் மக்கள்தான் என்பதையும் புலிகள் உணர வேண்டிய முக்கிய தருணம் இது. தாம் தமிழ்த்தேசத்தின் நலன்களுக்காக போராடும் வரை, மக்களின் சுயமான, வெகுஜன போராட்டங்கள் ஒருபோதும் தமக்கு எதிராக அமைய மாட்டாது என்பதை விடுதலைப் புலிகள் உறுதியாக நம்ப வேண்டும். இதன் மூலம், நமது தேசவிடுதலை போராட்டமானது, வெகுஜன போராட்ட வடிவங்களும் இராணுவ தாக்குதல்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்த நிலையில்

இறுதி இலக்கு நோக்கி வெற்றிகரமாக முன்செல்வது துரிதப்படும்.

**வரதன்**

## மக்கள் களம்

இதுவரை வந்த தமிழீழம் பத்திரிகைகளிலும், கடந்த இதழில் வந்த கட்டுரைகளையும் தொடர்ச்சியாக வாசித்ததில் எனக்கு பட்ட சில கருத்துக்களை முன்வைக்கலாம் என கருதுகின்றேன்.

பெண்கள் மீது ஆதிக்கத்தை செலுத்துவதில், தமிழ்த்தேசத்தை சேர்ந்த எந்த படிநிலை அமைப்பைச் சேர்ந்த ஆண்களாக இருந்தாலும் ஓர் ஒற்றுமை காணப்படுகின்றது. இவ்வாறு நிகழ்வதற்கு தமிழ்த்தேசத்தில் ஆதிக்கம் பெற்றுள்ள ஆணாதிக்க சித்தாந்தம் முக்கிய காரணமாகும். இந்த ஆணாதிக்க சமூக கட்டமைப்பில் இருந்தே, எமது தேசிய விடுதலை போராட்டம் ஊற்றெடுத்தது. இதனால் போராட்ட அமைப்புகளிடமும் இந்த ஆணாதிக்க சித்தாந்தமே மேலோங்கியிருந்தது. சில அமைப்புக்கள் மார்க்ஸிய கருத்துக்களை கொண்டிருந்த போதிலும், மார்க்ஸிய சித்தாந்தம் கட்சிக்குள் ஆளுமை பெறவில்லை. இவர்கள் பெண்களுக்கான சில முற்போக்கான கருத்துக்களை கொண்டிருந்த போதிலும், செயல்வடிவத்தில் ஆணாதிக்க செயற்பாடுகளே காணப்பட்டன. 1983ம் ஆண்டிலிருந்து, தேசிய விடுலை போராட்டத்தில் பெண்கள் ஆண்களுக்கு சமமாக, களத்தில் போரிட்டும், முன்னேறியும் வருகின்றார்கள். எனினும் அவர்களுக்கென்று ஒரு ஸ்தாபனம் இன்னும் கட்டியமைக்கப்படவில்லை. இன்றுவரை தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆண்கள் தலைமை தாங்கும் அமைப்புக்களிலும் ஆணாதிக்கத்திற்கும் உட்பட்டே பெண்கள் தங்கள் போராட்ட உணர்வுகளையும் தியாகங்களையும் செய்து வருகின்றார்கள். உலகில் பல நாடுகளில் விடுதலை போராட்டங்களில் பங்குபற்றிய பெண்கள் வெற்றியின் பின், மீண்டும் அடுப்பங்கரைக்கு அனுப்பப்பட்டு, ஆணாதிக்க அடக்குமுறைக்கு உட்படுகின்ற வரலாறுகளும் உண்டு. எனவே நமது பெண்கள் வரலாற்று படிப்பினைகளை கற்று, தமக்கான மார்க்ஸிய கோட்பாட்டு, சித்தாந்த அரசியலைக் கொண்ட தலைமையை உருவாக்கி, அதன்கீழ் சகல படிநிலைகளையும் சேர்ந்த பெண்களையும் அணிதிரட்ட வேண்டும். தேசிய விடுதலை போராட்டத்தில் மார்க்ஸிய கோட்பாட்டு, சித்தாந்தத்தை கொண்ட தலைமையை இனம் கண்டு, அதனுடன் இணைந்து, ஆண்-பெண் இருவரும் தலைமை தாங்கி நடத்தக் கூடிய கோட்பாட்டு, சித்தாந்த அரசியலை உருவாக்கி, அதைத் தமிழ்த்தேசிய விடுதலை போராட்டத்திறகுரிய தலைமை சக்தியாக மாற்றி, தமது விடுதலையையும் தேசிய விடுதலையையும் சாத்தியமாக்கி புதிய சமூகத்தை படைக்க வேண்டும். இதன் மூலம் தமிழ்த்தேசத்திலுள்ள சகல ஒடுக்குமுறைகளையும் தகர்த்தெறிந்து, புதிய சமுதாயத்தை உருவாக்கி, உலகத்தில் தமிழ் பெண்கள் முன்னுதாரணமாக திகழ வேண்டும்.

வருணன்- திருகோணமலை-தென்தமிழீழம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழம்

'The Editor'
BM Box 4002
London. WC IN
3XX
United Kingdom
www.thamileelam.org
info@thamileelam.org

## அற்ப சலுகைகளுக்கு மண்டியிடோம்!

அன்பான வாசகர்களே!

தமிழரின் புத்தாண்டு பிறந்திருக்கும் இத்தருணத்தில், ஈழத் தமிழரான எமது தேசியக் கனவுகள் நிறைவேறிடவும், தமிழீழ அரசு வெகுவிரைவில் அமைந்து சுதந்திரக் காற்றை நாங்கள் சுவாசிக்கவும் நமது தேசத்திற்கு அனைத்து நலன்களும் கைகூடிவரவும் வாழ்த்துக்கள்.

நமது தேசத்தின் விடுதலைப் போராட்டம் நாளாந்தம் முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. ஒரு புறம் போர்முனையில் விடுதலைப் புலிகளுக்கு கிடைத்து வரும் வெற்றிகள், மறுபுறம் தொடர்ந்து தோல்விகளை சந்தித்து வரும் சிறிலங்கா அரசு சமீபத்தில் கொழும்பில் நடைபெற்ற தாக்குதலின் பின்னரும் கூட பேச்சுவார்த்தையை நாடி நிற்கிறது. பிரதான எதிர்க்கட்சியான யு.என்.பி.யும் கூட சந்திரிகா தரப்புடனான அரசியல் தீர்வுக்கான கலந்துரையாடலில் முறித்துக்கொள்ளாது அதை தொடர்வதில் தனது ஒத்துழைப்பை வழங்கிவருகிறது. இவையாவும் யுத்தத்தில் தான் தோற்றுப் போகாது கௌரவமாக தன்னைப் பாதுகாத்துக் கொள்ள சிங்கள அதிகார தரப்பு முயற்சிப்பதையே காட்டுகிறது. இது அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தை மேடையில் சிங்கள அரசின் கை பலமிழந்து வருவதை வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது. இந்நிலையை நமது தேச அரசியலுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது பேச்சுவார்த்தையில் நம்சார்பில் கலந்துகொள்ளும் அரசியல் தலைமையின் வெற்றிகரமான அரசியலை பொறுத்ததாகும்.

சர்வதேச அரங்கில் ஈழத் தமிழர் ஒரு தேசமாக தமது அடையாளத்தை பொறிக்கும் கட்டத்தில், தமிழீழ தனியரசை அமைப்பதற்கான வாய்ப்புகள் அண்மித்து வரும் சூழலில் எமது தரப்பு அரசியல் கோரிக்கைகள் இவற்றிற்கு சமாந்தரமானவையாக இருக்க வேண்டும். இந்த அடிப்படையில் அரசியல் பேச்சுவார்த்தை மேடையில் எமது குரல் உறுதியாகவும் ஒற்றுமையுடனும் ஒலித்திட வேண்டும். இதற்குமாறாக தமிழர் தரப்பு அரசியல் சக்திகள் தத்தம் வழியில் அற்ப கோரிக்கைகளுக்காக சிங்களத் தலைமையிடம் மண்டியிடப் போவது ஈழத்தமிழரின் வீரமிகு போராட்ட வரலாற்றிற்கும் சுயகௌரவத்திற்கும் இழுக்கை ஏற்படுத்துவதாகவே இருக்கும். இத்தகைய சந்தர்ப்பத்தில் சொந்த நலன்களை பின்தள்ளி தேசத்தின் நலனை முதன்மைப் படுத்தி செயற்படுவது தேச நலனில் அக்கறையுடைய அனைத்து அரசியல் சக்திகளினதும் கடமையென்பதை இங்கு வலியுறுத்துகிறோம்.

யுத்த ஆக்கிரமிப்பும் தொடர்சியான அழித்தொழிப்புக்களுக்கும் பொருளாதாரத் தடைக்கும் மத்தியில் தான் நமது தேசம் அரசியல் பேச்சுவார்த்தையை எதிர்கொள்ள தயாராகி வருகிறது. நாளாந்தம் நமது மக்கள் படுகொலைக்குள்ளாகும் செய்திகளும் குழந்தைகளின் பட்டினிச் சாவு பற்றிய துயர் தகவல்களும் தேசமெங்கும் எதிரொலித்த வண்ணமிருக்கும் இத்தகைய சந்தர்ப்பத்தில் எமது உரிமைகளை வென்றுகொள்வதற்கு கிடைக்கும் அனைத்து வழிமுறைகளையும் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு எமது பக்க ஆற்றல்களை ஒன்றுகுவிப்போம்.

நமது தேசிய விடுதலைப் போராட்டத்தில், விடுதலை புலிகள் வகித்து வருகின்ற பாத்திரம் குறித்த, எமது கட்சியின் மதிப்பீடுகளையும் நிலைப்பாடுகளையும் இந்த இதழிலிருந்து முன்வைக்க விருக்கிறோம். தேசநலன் சார்ந்து, நாம் முன்வைக்கின்ற இத்தகைய மதிப்பீடுகளும் நிலைப்பாடுகளும் நமது அரசியல் சூழலில், மக்களின் பங்களிப்பும், பன்முகத்தன்மையும், ஜனநாயக மரபுகளும் உறுதியாக நிறுவப்பட வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்!

தோழமையுடன்

ஆசிரியர் குழு (15. 04. 00)

வட அமெரிக்கத் தொடர்புகட்கு:
300 Borough Dr.,
PO Box 47032
Scarborough,On.
M1P 4ZP
Canada

ஐரோப்பியத் தொடர்புகட்கு:
'The Editor'
BM BOX 6769
LONDON
WCI 3XX, U.K.
Tel: 07041372064

## இந்திய அரசின் புதிய நிலைப்பாடு?



இந்திய அரசின் வெளியுறவுச் செயலர், சிறிலங்கா அரசு - விடுதலைப்புலிகளுக்கு இடையில் நடைபெறவுள்ள அரசியல் பேச்சு வார்த்தை குறித்து தனது மௌனத்தைக் கலைத்துள்ளார். இலங்கையின் ஐக்கியம், பிராந்திய ஒருமைப்பாட்டு என்ற வரையறைக்குள், சகல தரப்பிற்கும் ஏற்புடையதாக தீர்வு அமைய வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். இநதிய அரசின் தற்போதைய நிலைப்பாடு இதுவாகும்.

80களின் நடுப்பகுதியில், தமிழ் விடுதலை அமைப்புகளுக்கு ஆயுதப் பயிற்சியளித்தும், ஆயுதங்கள் வினியோகித்தும், புதிய புதிய இயக்கங்களை உருவாக்கி, தனது தேவைக்கேற்ப தாக்குதல்களை முடுக்கிவிடச் செய்தும் தளர்த்தியும், இதே சிறிலங்கா அரசினை தனது கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவது இந்தியஅரசின் நிலைப்பாடாக இருந்தது. ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டம் தொடரவிடாது அழித்தொழிப்பது 1990 இல் அதன் நிலைப்பாடாகும்.

ஈழத்தமிழர் பிரச்சனை சிறிலங்காவின் உள்நாட்டு பிரச்சனை என்பது இரண்டு வருங்களுக்கு முன் இந்திய அரசின் நிலைப்பாடாகும். சிறிலங்கா அரசு போர் முனையில் வெற்றிவாகை சூடியுள்ளதாக பிரச்சாரங்கள் மேற்கொண்டிருந்த போது இந்நிலைப்பாட்டை இந்தியஅரசு எடுத்திருந்தது.

அண்மைக்காலம் வரை, சிறிலங்காவின் ஆக்கிரமிப்பு படைகளுக்கு இராணுவ மற்றும் உளவுத்துறை ஒத்துழைப்புகள் வழங்குவதும், விடுதலைப் புலிகளின் கப்பல்களை சர்வதேச கடல் எல்லைக்குள் சென்று கைப்பற்றுவதும் அழித்தொழிப்பதும் அதன் நிலைப்பாடாக இருந்து வருகின்றது.

நாளை, சிறிலங்கா ஆக்கிரமிப்பு படைகள் நமது தேசத்தால், தோற்கடிக்கப்பட்டு, தமிழீழ குடியரசு அமையப்போகும் தருணத்தில், தன் படைகொண்டு மறுபடியும் எம்தேசத்தை ஆக்கிரமிக்க முனைவது இந்திய அரசின் மற்றுமொரு நிலைப்பாடாக இருந்தாலும் நாம் ஆச்சிரியப்படுவதற்கில்லை.

இதற்கெல்லாம் அவர்கள் கூறுகின்ற ஒரேயொரு காரணம் இந்தியாவின் தேசிய நலன் என்பதாகும். இதன் பொருள் இந்தியஅரசின் பின்னேயுள்ள ஆளுங்குழுமத்தின் நலன்கள் என்பதை நாம் அறிவோம். அப்படியாயின் நமது தேசிய நலன்களை அவர்களின் நலனுக்கு பலியிட வேண்டும் என்கின்றார்களா? சின்னஞ்சிறிய நம் தேசம், இன அழிப்பில் இருந்தும் ஆக்கிரமிப்பில் இருந்தும் தன்னை விடுவித்துக்கொண்டு, தனக்கென சொந்த குடியரசை அமைத்துக்கொள்வதும், சக தேசங்களுடன் சக வாழ்வும், சமாதானமும் செழிக்க விளைவதும் பலம் மிக்க ஒரு பிராந்திய வல்லரசு என தன்னை அழைத்துக்கொள்ளும் இந்திய அரசிற்கு அப்படியென்ன ஆபத்தாக அமைந்து விடப்போகின்றது?

தற்போது, பொருளாதார ரீதியிலும், இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் பல காரணங்கள் இந்திய அரசின் நிலைப்பாடுகளின் பின்னே உள்ளது. அவை எதுவாகவும் இருக்கட்டும். நமது தேசத்தின் அழிவில் தனது பாரிய அரசின் நிலைத்தலை இந்தியஅரசு பேண முயல்வது நமது தேசிய நலன்களை பறிப்பதாகும். எந்தவொரு தேசத்திற்கும் உள்ள உரிமையை போல, எமது தேசிய நலன்களை காக்க விட்டுக்கொடுக்காது போராடுவது எமது நிலைபாடாகும்.

இந்த பின்புலத்தில், தனது நலன்களில் இருந்து அடிக்கடி நிலைப்பாடுகளை மேற்கொள்ளும் இந்திய அரசு, ஈழத்தமிழருக்கு சாதகமான நிலைப்பாட்டை எடுக்கும் என எந்தவித எதிர்பார்ப்பும் நமக்கு வேண்டாம். அப்படி இதுவரை இந்தியஅரசு எடுத்ததும் கிடையாது. எமக்கு சாதகமாக செயற்பட்டதாக இடைக்காலத்தில் ஒரு தோற்றப்பாடு இருந்தாலும், நீண்ட காலத்தில் எமது போராட்டத்தை முடக்கி தனது நலனுக்கு ஏற்புடைய தீர்வை திணிக்கும் நோக்கில்தான் என்பதை அது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்து விட்டது.

எனவே இந்திய அரசின் தற்போதைய நிலைப்பாட்டை இட்டு ஈழத்தமிழர் எவரும் விசனிக்க வேண்டாம். ஜே.ஆரின் ஆணையின் பேரில் அன்று விடுதலை அமைப்புகளின் ஆயுதங்களை களைந்து சிறிலங்கா அரசிடம் ஒப்படைத்ததையும், யாழ்ப்பாணத்தை கைப்பற்ற நமது இரண்டாயிரம் மக்களை கொன்று குவித்ததையும் நூற்றுக்கணக்கில் விடுதலைப்புலிகளை வேட்டையாடியதையும், எப்படி நாம் மறக்க முடியும்?

விஜி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்